முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 489/2018

தேதி : 18-03-2024

(வா.சா.1) – ரெங்கம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை :

28.07.2018 தேதி பிரதிவாதி என்னிடம் ரூபாய் பத்து லட்சம் வாங்கவில்லை. பிரதிவாதி என்னிடம் ரூபாய் இரண்டு லட்சம் மட்டும் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக இரண்டு வெற்று காசோலைகள் என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த இரண்டு வெற்று காசோலைகளை நான் அதிகமான தொகைக்கு நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ரூபாய் இரண்டு லட்சத்திற்கு பிரதிவாதி எனக்கு 12 சதவீத வட்டி கொடுத்தார் என்றால் சரியல்ல. ரூபாய் இரண்டு லட்சம் என்பது பொய். பிரதிவாதி எனக்கு ரூபாய் இரண்டு லட்சத்தை திருப்பி செலுத்த தயாராக உள்ளார் என்றால் அவர் என்னிடம் வாங்கியது ரூபாய் பத்து லட்சம் ஆகும். பிரதிவாதி என்னிடம் ரூபாய் பத்து லட்சம் வாங்கவில்லை என்றும், அதற்காக தாவா காசோலைகள் கொடுக்கவில்லை என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2024.03.19 10:09:41 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.